உரிமையியல் மேல்முறையீடு எண் 94/2021

1

**அறிக்கை அளிக்கக்கூடியது**

**இந்திய உச்ச நீதிமன்றம்**

**உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு**

**உரிமையியல் மேல்முறையீடு எண் 94/2021**

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 16857 of 2019-இல் இருந்து எழுகிறது)

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்** **மேல்முறையீட்டாளர் (கள்)**

**எதிர்**

**அப்துல் சலாம் சர்க்கார் (இறந்தவர்)**

**மற்றும் பலர்** **எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)**

## தீர்ப்புரை

**மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு தனஞ்சய ஒய் சந்திரசூட்**

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894-இன் விதிகளின் கீழ் நடந்த, கையகப்படுத்துதலுக்கான, ஆறுதல் தொகையின் மீதான வட்டிக்கு பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளதா என்பதுதான் தற்போதைய மேல்முறையீட்டில் எழும் ஒரே கேள்வி. இவ்வழக்கு, **குர்ப்ரீத் சிங் எதிர்**

**யூனியன் ஆஃப் இந்தியா**[1] **("குர்ப்ரீத் சிங்")** என்ற இந்த நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வின் தீர்ப்பின் விளக்கத்தை மாற்றுகிறது.

3. டிசம்பர் 1, 2020-ஆம் தேதியிட்ட இந்த நீதிமன்றத்தின் உத்தரவின் படி, "குர்ப்ரீத் சிங் வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பினை உள்ளடக்கியுள்ளதா என்ற கேள்வியை நீதிமன்றம் பரிசீலிக்கும்" என்பதைக் கவனத்தில் கொண்டு இவ்வழக்கு தெளிவாக்கப்படுகிறது.

4. தற்போதைய வழக்கில், குறித்தனுப்புகை நீதிமன்றம், 26 ஜூலை 1990-ஆம் தேதியிட்ட அதன் தீர்ப்பின் மூலம், ஆறுதல் தொகை மீதான வட்டியை ஆண்டுக்கு 12% வழங்க அனுமதித்தது.

5. மேல்முறையீட்டில் இந்த விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம், ஜூலை 12, 2001-ஆம் தேதியிட்ட அதன் தீர்ப்பின் மூலம், ஆறுதல் தொகை மீதான வட்டி அம்சம் குறித்த பின்வரும் விளக்கத்தை வழங்கியது:

> *"உரிமை கோருபவர்களுக்கு, ஆறுதல் தொகை மற்றும் கூடுதல் தொகைக்கான வட்டிக்கு உரிமை இல்லை என்பது மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், ஆறுதல் தொகை மீதான வட்டி வழங்குவது தொடர்பான பிரச்சினையானது, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் நீதியர் பேராயத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, உச்ச நீதிமன்றத்தின் குறுக்கு விசாரணையின் முடிவைப் பொறுத்து, சம்பந்தப்பட்ட கீழமை நீதிமன்றத்தில் பொருத்தமான மனுவைத் தாக்கல் செய்ய உரிமை கோருபவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். "*

---

1 (2006) 8 எஸ். சி. சி 457

6. நீதியர் ஈராயத்தின் தீர்ப்புக்கு எதிரான சிறப்பு அனுமதி மனுக்கள், 22 மார்ச் 2004 அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. வருவாய் கோட்ட அதிகாரி தாக்கல் செய்த மறுஆய்வு மனுவும், ஆகஸ்ட் 2, 2006 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தப் பின்னணியில்தான், குர்பிரீத் சிங் வழக்கில் அரசமைப்பு அமர்வு தீர்ப்பின் அடிப்படையில் (மேற்படி), இந்த வழக்கின் ஆறுதல் தொகை மீதான வட்டி கோருதலின் உறுதித்தன்மையை மதிப்பிட வேண்டும்.

7. குர்ப்ரீத் சிங் (மேற்படி) மீதான தீர்ப்பின் 54 வது பத்தியில், சுந்தர் - எதிர்- யூனியன் ஆஃப் இந்தியா, என்ற முந்தைய முடிவின் பின்னணியில் மேற்கண்ட பிரச்சினை குறிப்பாக பரிசீலிக்கப்பட்டது [2]. இந்த பிரச்சனையை கையாள்வதில், மாண்புமிகு நீதியரசர் திரு பி கே பாலசுப்ரமணியன், அரசமைப்பு அமர்விற்காக பேசுகையில், இவ்வாறு குறிப்பிட்டார். :

---

2 (2001) 7 எஸ்சிசி 211

*"54..... சுந்தர் (2001) 7 எஸ் சி சி 211 : 2001 சப்ளி (3) எஸ் சி ஆர் 176] இல் உள்ள தீர்முடிவின் பார்வையில், தீர்ப்பாணை குறிப்பாக வழங்கப்படாத போதிலும், தீர்வுத்தொகை பெற்றவர்/தீர்ப்பாணை பெற்றவர், ஆறுதல் தொகை மீதான வட்டியைக் கோருவதில் நிறைவேற்றல் பெறுவாரா என்பது கேள்வி. நிறைவேற்றுகை நீதிமன்றம், தீர்ப்பாணையை மீர முடியாது என்பது நன்கு அறுதியிடப்பட்ட ஒன்றாகும்.* **எனவே, ஆறுதல் தொகை மீதான வட்டிக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தால், அது வெளிப்படையாகவோ அல்லது குறித்தனுப்புகை நீதிமன்றம் அல்லது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரை அல்லது தீர்ப்பாணையின் தேவையான உட்குறிப்பு மூலமாகவோ, நிறைவேற்றுகை நீதிமன்றம் தீர்ப்பாணையை மீர முடியாது எனும் காரணத்தினால், சுந்தர்(2001) 7 எஸ் சி சி 211 : 2001 சப்ளி (3) எஸ் சி ஆர் 176] என்ற வழக்கை அடிப்படையாகக் கொண்டு, ஆறுதல் தொகை மீதான வட்டிக்கான கோரிக்கையை நிராகரிக்க வேண்டும். ஆனால், குறித்தனுப்புகை நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பானது, குறிப்பாக ஆறுதல் தொகை மீதான வட்டி பற்றிய கேள்வியைக் குறிப்பிடவில்லையென்றால் அல்லது உரிமைகோரல் செய்யப்படாத மற்றும் வெளிப்படையாக நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அல்லது குறித்தனுப்புகை நீதிமன்றம் அல்லது மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் மறைமுகமாக, இழப்பீடு மீதான வட்டி மட்டுமே வழங்கப்பட்டால், சுந்தர் [(2001) 7 எஸ் சி சி 211 : 2001 சப்ளி (3) எஸ் சி ஆர் 176] ன் அகவுரையை நிறைவேற்றுகை நீதிமன்றம் பயன்படுத்தலாம். மேலும் வழங்கப்படும் இழப்பீட்டில் ஆறுதல் தொகை அடங்கும் என்று கூறுகின்றனர் மற்றும் அத்தகைய நிகழ்வில், அந்தத் தொகையின் மீதான வட்டியை செயல்படுத்துவதில் வைப்பீடு செய்ய உத்தரவிட முடியும். இல்லையென்றால் இல்லை.ஆறுதல் தொகை மீதான அத்தகைய வட்டியை, நிலுவையில் உள்ள நிறைவேற்றுகைகளில் மட்டுமே கோரலாம் என்றும், மேலும் முடிவடைந்த நிறைவேற்றுகைகளில் கோர இயலாது என்றும்,**

**சுந்தர் [2001] 7 எஸ். சி. சி. 211:2001 வட்டி (3) எஸ். சி. ஆர். 176]** (19-9-2001)-*ல் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து, நிறைவேற்றுகை நீதிமன்றம் அதனை மீட்டெடுக்க அனுமதிக்கும் என்றும், மேலும் எந்த முந்தைய காலத்திற்கும் அல்ல, என்பதையும் நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்.மேலும் ஆணை வைத்திருப்பவரால் இது எந்தவிதமான மறு ஒதுக்கீடு அல்லது புதிய ஒதுக்கீட்டை ஏற்படுத்தாது என்பதையும் நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். இந்திய அரசியலமைப்பின் 141 மற்றும் 142 பிரிவுகளின் கீழ், எங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த கேள்வியில் பல வழக்குகளை தவிர்க்கும் நோக்கில், இதை நாங்கள் தெளிவுபடுத்துவதன் மூலம் சுட்டிக்காட்டியுள்ளோம்.*

8. **குர்ப்ரீத் சிங்** தீர்ப்புரையில் (மேற்படி) வலியுறுத்தப்படுவது யாதெனில், நிறைவேற்றுகை நீதிமன்றம் அதைக் குறிப்பிடாமலோ அல்லது வெளிப்படையாகவோ அல்லது தேவையான உட்கிடையுடனோ நிராகரிக்கவில்லையெனில், ஆறுதல் தொகை மீதான வட்டி செலுத்தப்பட வேண்டியதாகிறது. மேலும், நிலுவையில் உள்ள நிறைவேற்றல் நடைமுறைகளில் மட்டுமே இந்தக் கோரிக்கையை முன்வைக்க இயலும். தற்போதைய வழக்கில், ஆறுதல் தொகை மீதான வட்டிக்கான கோரிக்கை, குறித்தனுப்புகை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படவில்லை. குறித்தனுப்புகை நீதிமன்றத்தின் முடிவிலிருந்து எழுந்த மேல்முறையீட்டில், உயர்நீதிமன்றம் ஜூலை 12, 2001- ஆம் தேதியிட்ட அதன் தீர்ப்பில், இந்த நீதிமன்றத்தின் நீதீயர் பேராயம் முன்

இந்த விடயம் நிலுவையில் இருந்தது கவனிக்கப்பட்டதால், ஆறுதல் தொகை மீதான வட்டி வழங்கப்படுமா என்ற பிரச்சினை, அந்த நடவடிக்கைகளின் வெளிப்பாட்டைப் பொறுத்தது, மேலும் இது உரிமை கோருபவர்கள் கீழமை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டது. அக்டோபர் 19, 2006-ஆம் நாள், **குர்பிரீத் சிங்** (மேற்படி) வழக்கில், இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு, பிரதிவாதிகள் ஆறுதல் தொகை மீதான வட்டியை வழங்குவதற்கான விண்ணப்பத்தை முன்வைத்தனர். உயர்நீதிமன்றம் அதன் மறுக்கப்பட்ட தீர்ப்பின் மூலம், **குர்பிரீத் சிங்** (மேற்படி) தீர்ப்பைக் கருத்தில் கொண்டு அத்தகைய விண்ணப்பம் ஏற்கத்தக்கது என்ற முடிவுக்கு வந்துள்ளது. கொள்கையளவில், இது அரசமைப்பு அமர்வு தீர்ப்பின்படி இருப்பதால், வேறு எந்தக் கருத்தையும் எடுத்துக் கொள்வதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை.

9. மேல்முறையீட்டாளர் சார்பாக வலியுறுத்தப்பட்ட கோரிக்கையானது, தற்போதைய வழக்கில், முந்தைய நிறைவேற்றுகை மனு முடிவுக்கு வந்ததும், முதல் தீர்வம் மற்றும் உயர்த்தப்பட்ட இழப்பீடு ஆகியவை வைப்பீடு செய்யப்பட்டு உரிமையாளரால் ஒதுக்கப்பட்ட பின்னர், 2008 ஆம் ஆண்டில் கோரப்பட்டது என்பதாகும். எங்களது பார்வையில், இது

ஆறுதல் தொகை மீதான வட்டி வழங்குவதற்காக உரிமை கோருபவரின் உரிமையை ரத்து செய்யாது. மேலும் 12 ஜூலை 2001 தேதியிட்ட தீர்ப்பில், ஆறுதல் தொகை மீதான வட்டிக்கான கோரிக்கை நிராகரிக்கப்படவில்லை என்று உயர்நீதிமன்றத்தால் வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்தின் நீதியர் பேராயத்தால் இந்த விஷயம் தீர்க்கப்பட்ட பிறகு, சார்பு நீதிமன்றத்தின் முன் நடவடிக்கைகளை நிறுவ உயர் நீதிமன்றம் வழங்கிய உரிமை, ஒரு சிறப்பு அனுமதி மனுவின் கீழ் வருவதாகும். சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்பட்டதன் மூலம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது. வருவாய் அலுவலர் தாக்கல் செய்த மறுஆய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, இடைப்பட்ட பகுதிகளுக்கு உரிமை கோருபவர்கள், ஆறுதல் தொகை மீதான வட்டி மானியத்திற்கு விண்ணப்பிக்க உரிமை உண்டு. மேலும், குறிப்பாக, பொருண்மையை கருத்தில் கொண்டு இந்த கோரிக்கையானது, எந்த முன் நிலையிலும் நிராகரிக்கப்படவில்லை என்றும் வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

10. மேற்கூறிய பார்வையில் இந்த விஷயத்தில், உரிமைகோருபவர்கள்-பதிலளிப்பவர்கள் ஆறுதல் தொகையின் மீதான வட்டியை செலுத்துவதற்கு உரிமையுடையவர்கள் என்ற உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். இருப்பினும், துல்லியமான கணக்கீட்டை பொறுத்தவரை, கணக்கீடுகளை சரிபார்ப்பதற்கும், பொருத்தமான உத்தரவுகளை பிறப்பிப்பதற்கும் அதை குறித்தனுப்புகை நீதிமன்றமத்திடம் விட்டுவிடுவது பொருத்தமாக இருக்கும். இந்த நடவடிக்கைகள் நிலுவையில் இருந்ததால், இடைக்கால உத்தரவுகளின் அடிப்படையில், மேல்முறையீட்டாளரால் வைப்பீடு செய்யப்பட்டது. வைப்பீடு செய்யப்பட்ட தொகை பிரதிவாதிகளால் திரும்பப் பெற அனுமதிக்கப்படும் மற்றும் செலுத்த வேண்டிய இறுதித் தொகைக்கு ஏற்ப உரிய கடன் வழங்கப்படும். **குர்ப்ரீத் சிங்கின்** (சுப்ரா) அரசமைப்பு அமர்வு தீர்ப்பின் அடிப்படையில், **சுந்தர் VS யூனியன் ஆஃப் இந்தியா** (19 செப்டம்பர் 2001) தீர்ப்பின் தேதியிலிருந்து ஆறுதல் தொகையின் மீதான வட்டி செலுத்தப்படும் என்பதையும் நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்.

11. அதன்படி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்த நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க இந்த நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூ.5 லட்சம், உரிமை கோருபவர்களுக்கு வழங்கப்படும்.

12. நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள், ஏதேனும் இருந்தால், தள்ளுபடி செய்யப்படுகிறது.

**மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு தனஞ்சய ஒய் சந்திரசூட்**

**மாண்புமிகு நீதியரசர் திரு சஞ்சீவ் கன்னா**

புது தில்லி

13.01.2021.

---

**<u>உரிமைத்துறப்பு</u>**

" வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்க்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றம் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."